2026 சட்டமன்றத் தேர்தலில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 4.4.2026 அன்று திருப்பத்தூர், சிவகங்கை, முதுகுளத்தூர், பரமக்குடி, இராமநாதபுரம், திருமயம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் பரப்புரை மேற்கொண்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு:

● சிங்கம்புணரி, பேரறிஞர் அண்ணா சிலை பகுதியில், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களை ஆதரித்து பரப்புரை செய்தார்.

● சிவகங்கை, அம்பேத்கர் சிலை பகுதியில், கழகக் கூட்டணியின் சிவகங்கை சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளர் முக்குலத்தோர் புலிப்படை கட்சியின் தலைவர் கருணாஸ் அவர்களை ஆதரித்து பரப்புரை மேற்கொண்டார்.

● முதுகுளத்தூர், பேருந்து நிலையம் பகுதியில், முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்களை ஆதரித்து, உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார்.

● பரமக்குடி, பேருந்து நிலையம் பகுதியில், பரமக்குடி சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் கே.கே.கதிரவன் அவர்களை ஆதரித்து பரப்புரை செய்தார்.

● இராமநாதபுரம், அரண்மனைப் பகுதியில், இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்களை ஆதரித்து பரப்புரை செய்தார்.

● திருமயம், கலியபெருமாள் அய்யனார் கோயில் பகுதியில், திருமயம் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்களை ஆதரித்து பரப்புரை மேற்கொண்டார்.